**Revised**

**செய்தி வெளியீடு எண் : 409** **நாள் : 01.03.2023**

**மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கத்தின் புதிய நியாயவிலைக் கடையினை திறந்து வைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் வழங்கினார்.**

இன்று (01.03.2023) சென்னை, சிந்தாதிரிப்பேட்டை, உலகப்ப தெருவில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ. 21.44 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்ட திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்க நியாயவிலைக் கடையினை திறந்து வைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசிய பொருட்களும், புதிய குடும்ப அட்டைகளும் வழங்கினார்.

திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கத்திற்கு சொந்தமான இந்த நியாயவிலைக்கடைக்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் மூலம் அத்தயாவசிய பொருட்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு மொத்தம் 687 அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் 26 சர்க்கரை குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் தங்குதடையின்றி விநியோகம் செய்யப்படும்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கே.ஆர்.பெரியகருப்பன், மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தயாநிதி மாறன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு தலைவர்(பணிகள்) திரு. நே.சிற்றரசு, தேனாம்பேட்டை மண்டல குழு தலைவர் திரு. எஸ். மதன் மோகன் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in